## கேள்வி:

# “ஐக்கியத்திற்கு ஒரு எல்லை உண்டா?”

## பதில்:

*“இதோ, சகோதரர் ஒருமித்து வாசம் பண்ணுகிறது எத்தனை நன்மையும் எத்தனை இன்பமுமானது” (சங். 133:1). “பிரியமுள்ள” (லூக். 2:14ஐக் காண்க) மனிதர்கள் விரோதம் கொண்டிருக்க மாட்டார்கள். அவர்கள் மல்யுத்தம் செய்வது போல் “போட்டியிடக் கூடியவர்களாய்” (கிரேக்கம்: athleo; 2 தீமோ. 2:5) இருக்கின்றனர், ஆனால் “சண்டையிடுதல்” (கிரேக்கம்: machomai; 2 தீமோ. 2:24) போன்ற விரோத முள்ளவர்களாவதில்லை; அவர்கள் விவாதம் செய்கிறவர்களாக வும் ஆவதில்லை. முரண்பாட்டின் ஆவி அழகற்றது, ஐக்கியத் தின் ஆவியோ சந்தோஷமானது, சில மக்களுடைய பதில் செயல், ஒருமைப்பாட்டிற்கு எதிராக உள்ள உபதேசத் தடைகள் யாவற்றையும் நீக்குவதாய் உள்ளது.*

## உபதேசம் இல்லாத நிலையா?

*சில மதங்களில் அல்லது தத்துவங்களில், உபதேசம் இல்லாதிருப்பது ஒன்றும் செய்வதில்லை என்பது, ஒரு உபதேச மாகிறது. ஒரு பெரிய குடையின் கீழ், ஒரு தேவனை வணங்கு வோர், பல தெய்வ வணக்கமுடையோர், தேவ நம்பிக்கை யற்றோர் யாவரும் ஐக்கியமாக அனுமதிக்கப்படுகின்றனர். இப்படிப்பட்ட ஒரு தத்துவத்தின் கீழ், புத்த மதம் இஸ்லா மியத்திற்குச் சமமானதாகக் கருதப்படுகிறது, அது புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவத்திற்கு சமநிலையில் இடமளிக்கப் படுகிறது. இப்படிப்பட்ட தத்துவங்களை ஏற்றுக் கொள்பவர் கள், கிறிஸ்தவம் மட்டுமே உண்மையான ஒரே மார்க்கம் என்று எண்ணுபவர்களை, சகிப்புத்தன்மையற்ற குருட்டுப் பிடிவாத முள்ளவர்களாகக் குறித்து விடுகின்றனர்.*

## இயேசுவின் தெய்வீகம் மட்டுமா?

சிலர், இயேசுவின் மார்க்கம் தனிப்பட்டதென்றும், அவராலேயல்லாமல் ஒரு மனிதரும் பிதாவினிடத்திற்கு வர முடியாது (யோவா. 14:6) என்றும் கருதியும் கூட, இந்தத் தனிப்பட்ட குடையின் கீழ் இயேசுவின் தெய்வீகம் உள்ளிட்ட சில கொள்கைகளைக் கொண்டு, அதன்றி மாறுபட்ட வேறு சில கொள்கைகளையும், உபதேசங்களையும் உடையவர்கள் யாவரும் இருக்க முடியும் என்றும் கருதுகின்றனர். வேதாகமத்தை நம்புகின்ற சிலர், “ஒரு மனிதர் இயேசுவைக் கர்த்தர் என்று அறிக்கையிட்டுவிட்டால், அவர் என் சகோதரராய் இருக்கிறார், எங்களது ஐக்கியம் உண்மையானது” என்று கூறுகின்றனர். இயேசு கிறிஸ்துவின் தெய்வீகத்துடன், வேறு சில அவசியமான உபதேசங்களைக் கொண்டவர்களை இவர்களால் சகிக்க முடிவதில்லை.

## தவறுகின்ற பிரசங்கியார்களா?

தவறான உபதேசங்களைக் கொண்டுள்ள சில பிரசங்கியார் களுடன் ஐக்கியம் வைப்பதில் ஆர்வம் கொள்வதென்பது மாற்கு 9:38-40ஐத் தவறாகப் பயன்படுத்தக் காரணமாகின்றது:

> அப்பொழுது யோவான் அவரை நோக்கி: “போதகரே, நம்மைப் பின்பற்றாதவன் ஒருவன் உமது நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்துகிறதைக் கண்டோம்; அவன் நம்மைப் பின்பற்றாதவனானதால், அவனைத் தடுத்தோம்” என்றான். அதற்கு இயேசு: ‘‘அவனைத் தடுக்க வேண்டாம்; என் நாமத்தினாலே அற்புதஞ் செய்கிறவன் எளிதாய் என்னைக் குறித்துத் தீங்கு சொல்லமாட்டான். நமக்கு விரோதமா யிராதவன் நமது பட்சத்திலிருக்கிறான்” (மாற். 9:38-40).

ஐக்கியத்தின் விலைமதிப்பற்ற பெயரில், மேற்கண்ட வசனப் பகுதியை அடிப்படையாக வைத்து, நாமகரணக் கூட்டத்தின் போதகர்களும் மற்றும் தவறுகின்ற சுவிசேஷ ஊழியர்களும் அங்கிகரிக்கப்படவேண்டும் என்று முடிவு செய்வது சரியா? மாற்கு 9ல் பிசாசுகளைத் துரத்துகிறவனாகக் காணப்படுகிறவனை யோவான் தனிப்பட்ட வகையில் அறிந்திருக்கவில்லை என்பதால், அந்த பிசாசுகளைத் துரத்து கிறவர் கள்ள போதகராகிவிடமாட்டார். இதற்கு நேர்மாறாக, இயேசு அந்நபரை அங்கீகரித்தார். இயேசு கள்ள போதகரை

அங்கீகரிக்க மாட்டார் என்று நாம் அறிகிறோம் (மத். 7:15-23). அந்த மனிதர் இயேசுவின் நாமத்தினால் பிசாசுகளை உண்மையாகவே துரத்தினார், இது ஏமாற்றுக்காரர்களால் செய்ய முடியாததாகும் (அப். 19:13-16). எனவே மேற்சொன்ன சம்பவத்தில் இயேசு, நாமகரணக் கூட்ட போதகர்களையும், தவறுகின்ற சுவிசேஷ ஊழியக்காரர்களையும் அங்கீகரித்தார் என்று சொல்லுவது பின்வரும் வசனப் பகுதிகளைப் பயனற்ற தாக்குகின்றது: மத். 15:13, 14; யோவா. 8:32; ரோமர் 16:17; 1 தெச. 5:21, 22; கலா. 1:6-9; எபே. 4:1-7; 2 பேது. 2:1, 2; 1 யோவா. 4:1; 2 யோவா. 9-11; 2 தீமோ. 4:1-5.

## அப்போஸ்தலருடைய உபதேசம்

இயேசு கிறிஸ்துவின் தெய்வீகத்தோடு, சில போதனை களும் தேவை என்பதை யோவான் 12:48 நமக்குக் காண்பிக் கிறது: “என்னைத் தள்ளி என் வார்த்தைகளை ஏற்றுக் கொள்ளா தவனை நியாயந்தீர்க்கிறதொன்றிருக்கிறது; நான் சொன்ன வசனமே அவனைக் கடைசிநாளில் நியாயந் தீர்க்கும்.” இயேசு பேசிய வார்த்தைகளில், அப்போஸ்தலர்களுக்கு கட்டவும் கட்டவிழ்க்கவும் வல்லமை அளித்ததும் உள்ளடங்கியுள்ளது (மத். 18:18). அப்போஸ்தலரை ஏற்றுக்கொள்வதென்பது, கிறிஸ்துவையும் அவருடைய பிதாவையும் ஏற்றுக் கொள்ளு வதாகும் (மத். 10:40). அப்போஸ்தலர் ஒருவரை அசட்டை பண்ணுவதென்பது கிறிஸ்துவையும் அவர் பிதாவையும் அசட்டை பண்ணுவதாகும் (லூக். 10:16). ஆதி கிறிஸ்தவர்கள் இயேசு கிறிஸ்துவின் தெய்வீகத்தோடு கூட, அப்போஸ்தலரின் உபதேசத்தையும் பற்றியிருந்தனர் (அப். 2:36, 42).

‘‘இயேசுவே கர்த்தர்’’ என்று கூறுவதைக் காட்டிலும், கிறிஸ்துவுக்கு விசுவாசமாயிருப்பதும், கிறிஸ்துவில் ஐக்கியமா யிருப்பதும் அதிக மதிப்புடையவைகளாகும். ‘‘என்னை ஆண்டவரே! ஆண்டவரே! என்று நீங்கள் சொல்லியும், நான் சொல்லுகிறபடி நீங்கள் செய்யாமற் போகிறதென்ன?” என்று இயேசுவே கூறினார் (லூக். 6:46). மத். 19:28ல் அவர், தம்முடைய பன்னிரண்டு அப்போஸ்தலர்களும் மறுஜென்ம காலத்திலே (கி.பி. 30 பெந்தெகொஸ்தே முதல், உலகத்தின் முடிவு வரை) பன்னிரண்டு சிங்காசனங்களின்மேல் வீற்றிருப் பார்கள் என்று கூறியிருக்கிறார். மேலும் அவர்களுடைய

வாழ்க்கை முடிவுபரியந்தம் - அவர்களுடைய வாழ்க்கையின் முடிவுவரை மாத்திரமல்ல, காலங்களின் முடிவுவரை அவர்களோடு இருப்பதாக வாக்குத்தத்தம் செய்திருக்கிறார் (மத். 28:20). அவர்கள் போதிக்கின்ற எந்த உபதேசமும் சத்தியமாயிருக்கிறது, அவர்களால் போதிக்கப்படாத எந்த உபதேசமும் தவறானதாய் இருக்கிறது (1 யோவா. 4:6). ஆகவே, இரட்சிப்பின் திட்டம், சபை, பெயர், ஆராதனை செய்ய வழி, அல்லது வாழ்வதற்கான வழி ஆகியவற்றில் அப்போஸ்தலருடைய உபதேசத்திலிருந்து மாறுபட்டு (சமாதான முறையில் கூட) போதிப்பவர் எவரும் சத்தியத்தில் இருக்கிறார் என்றோ அல்லது கிறிஸ்துவுக்கு விசுவாசமாயிருக்கிறார் என்றோ சொல்ல முடியாது.

## முடிவுரை

புதிய ஏற்பாடு என்னவெல்லாம் போதிக்கின்றதோ அவை யாவும் உண்மையான சீஷத்துவத்தின் முக்கிய பங்காக உள்ளது. தேவன் அங்கீகரித்துள்ள (கிறிஸ்துவுக்குள்ளான) ஐக்கியமானது ஒருவர் அவ்வொருமைப்பாட்டை எவ்வளவாய் விரும்புகிறார் என்பதையோ ஒருவர் எல்லா மக்களையும் எவ்வளவாய் நேசிக்கிறார் என்பதையோ, அடிப்படையாகக் கொள்ளாமல், புதிய ஏற்பாட்டின் இருபத்தியேழு பரிசுத்த புத்தகங்களின் அடிப்படையிலேயே அமைந்துள்ளது.